1972 ஆகஸ்ட் 19]

குடி தண்ணீராக இருந்தாலும் சரி, வேறு தொழில் உபயோகத்திற்காக இருந்தாலும் சரி—இப்போது நாம் எந்த விலை கொடுக்கிறோமோ அதைவிட அதிகமாக ஆவதால்தான் தயக்கம் காட்டப்படுகிறது.

Sculpture Training

* 99. *Q.*—THIRU SAW. GANESAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken by the Government for the provision of employment opportunities to the students who have undergone training in sculpture at Mamallapuram;

(*b*) whether the Government will come forward to pass orders to the effect, that their 'Certificate' qualification will be equal to the 'Diploma' qualification; and

(*c*) the steps taken by the Government to show them concessions regarding employment in Temples and Public Works Department?

சிற்பத் துறைப் பயிற்சி

திரு. சா. கணேசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாமல்லபுரத்து சிற்பத் துறைப் பயிற்சி பெற்ற மாணாக்கர்கட்கு வேலை வாய்ப்பிற்கு அரசு என்ன செய்து இருக்கிறது?

(இ) அவர்களின் 'சர்டிபிகேட்' தகுதியை 'டிப்ளமோ' தகுதிக்கு நிகர் என ஆணையிட அரசு முன்வருமா?

(உ) கோயில்கள், பொதுப்பணித்துறை வேலைகளில் இவர்கட்கு சலுகை கிடைக்கச் செய்ய அரசு என்ன ஏற்பாட்டை செய்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் கோயில்களிலும் பிற இடங்களிலும் கல் சிற்பங்கள் செய்யும் பணிபுரிந்து வருகிறார்கள். உதாரணமாக, கன்னியாகுமரியில் விவேகாநந்தர் நினைவு மண்டபம் நிறுவுதலில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இப்பொழுது பூம்புகார் கலைக்கூடம் அமைப்பதில் அப்பயிற்சியாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். மேலும், பயிற்சி

நிலையத்தில் உள்ள உற்பத்திப் பிரிவில் வேலை பார்க்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நல்ல ஆர்வத்துடன் பயின்று வெளிவருபவர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு வசதி உள்ளது.

(இ) பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் L.E.E. ; L.C.E. வகுப்புகளில் பயிற்சி பெற குறைந்த பொதுக் கல்வித் தகுதியாக பள்ளி இறுதி வகுப்பில் தேறியும், ரசாயனம், பௌதிகம், கணிதம் முதலிய பாடங்களை விருப்பப் பாடமாகவும் எடுத்திருக்க வேண்டும். ஆனல் மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைப் பயிற்சிக் கூடத்தில் சேர 9 ஆவது வகுப்பில் தேறியிருந்தால் போதுமானது. மேலும் அவர்கள் பரம்பரையாக கற்சிற்பங்கள் செதுக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். 7 ஆவது அல்லது 8 ஆவது வகுப்பில் தேர்ச்சியடையாதவர்களும் அடைந்தவர்களும் தொழிற்கல்வியில் சிறந்த ஆர்வம் பெற்றிருந்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே, மகாபலிபுரம் சிற்பக் கலைப் பயிற்சிக்கூடத்தில் பயிலும் மாணவர்களுக்கான சான்றிதழை டிப்ளோமாவுக்குச் சமமாக ஏற்க இயலாது.

(உ) இத்துறையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் குறைவாகவே உள்ளதால் கோயில்கள், மண்டபங்கள் முதலிய இடங்களில் உள்ள கல் சிற்ப வேலைகளுக்கு இப்பயிற்சி பெற்ற மாணவர்களே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் பயிற்சி பெற்று சர்டிபிகேட் பெற்ற மாணவர்கள் நமது மாநிலத்தில் மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது வரையிலும் 78 இனங்கள் செய்து முடித்திருக்கிறார்கள். மொத்த மாணவர்கள் எண்ணிக்கை என்னிடத்திலே இல்லை.

Salt Production

*100. *Q.*—Thiru K. RAJARAM (on behalf of Thiru R. KRISHNASWAMY NAIDU) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Central Government have informed the State Government that at the time of the completion of works